# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

*web : www.slelections.gov.lk e-mail : info@slelections.gov.lk*


| | | |
|---|---|---|
| අංකය :<br>எனது இல: LAE/2018/4B | ඔබේ අංකය :<br>உமது இல. | දිනය :<br>திகதி :28.11.2017 |

**பதிவுத் தபால்**
**மிக முக்கியம்**

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்கள்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்/ மாகாண சபைகளின் அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,
அனைத்து அரச கூட்டுத்தாபன/ நியதிச் சட்ட சபைகளின் தவிசாளர்கள்/ பொது முகாமையாளர்கள்,

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2018**
**அரச மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளுக்கும் உரித்தான ஆதனங்களை தேர்தல் காலப்பகுதியினுள் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தல் மற்றும் தேர்தல் நடாத்தப்படவுள்ள மாகாணங்களுக்குரிய அலுவலர்கள், ஊழியர்களின் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வு/ இடமாற்றம் என்பவற்றை மட்டுப்படுத்தல்.**

உள்ளூர் அதிகார சபைகள் 93 இற்கான நியமனப் பத்திரங்கள் கோரப்படுகின்ற அறிவித்தல்கள் 2017.11.27 ஆந் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. அன்றைய தினம் தொடக்கம் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு முடிவடையும் வரையிலான காலப்பகுதி “தேர்தல் காலக்கெடு” என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலக்கெடுவிற்குள் அரசியல் கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஆகியோரை ஊக்குவிப்பதற்கு காரணமாக்கக் கூடிய அல்லது ஏனைய கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளரொருவர் ஆகியோருக்கு பாதிப்பேற்படுத்தத்தக்க விதத்திலான நடவடிக்கைகளுக்காக அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ள வேண்டுமெனவும் மற்றும் தேர்தல் நடாத்தப்படவுள்ள மாவட்டங்களில் அரசாங்க அலுவலர்கள்/ ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் போன்ற விடயங்களை மட்டுப்படுத்த வேண்டுமெனவும், அரசாங்க ஆதனங்கள் மற்றும் நிகழ்கால நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பிரதான அலுவலர்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்ப்பதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தின் 104(ஆ) (04)(அ) உறுப்புரைக்கமைய, “தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற கால எல்லைக்குள் அரசாங்கத்திற்கோ அல்லது ஏதேனும் ஓர் அரச கூட்டுத்தாபனத்திற்கோ உரித்தான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்று” ஏதேனும் ஓர் அரசியல் கட்சியையோ அல்லது ஏதேனுமொரு சுயேச்சைக் குழுவையோ ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக் கூடிய பணிகளுக்காக ஏதேனும் ஓர் அரசியல் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடை செய்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு. அவ்வுறுப்புரையின் (ஆ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர்.

03. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசுக்குச் சொந்தமான அனைத்து மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள் போன்ற வாகனங்களையும் ஹெலிகொப்டர், வானூர்திகளையும் பயன்படுத்துவதாக கடந்த தேர்தல் காலங்களிலும் இத்திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. ஆதலால் அரசாங்க வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் இவ்வாகனங்களை எந்தவோர் அரசியல் கட்சியினதும், சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்காகப் பயன்படுத்தாத விதத்தில் தேர்தல்கள் கால எல்லைக்குள் வாகன குழாத்தைப் பேணுவதில் முனைப்பான கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். அலுவலர்களுக்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assigned vehicle) அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் ஙற்றும் வாடகைக்கு பெறப்பட்டு கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்கள் என்பனவும் இவற்றில் உள்ளடங்குகின்றனவென்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இக்கால எல்லைக்குள் அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assigned vehicle) வாகனங்கள் தவிர்ந்த முக்கியமாக குழாத்துக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பவற்றிற்கான ஓட்டக் குறிப்புக்களை

முறையாகப் பேணி வரவேண்டுமென்பதோடு, இவ்வோட்டக் குறிப்புக்கள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அன்றாடம் பரிசீலிக்கப்பட்டு அவ்வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தபடுவதில்லையென்பது தொடர்பாக திருப்தி காணுதல் வேண்டும். கடமை அலுவல்களுக்காக ஈடுபடுத்துவதாக போலி குறிப்புக்களையிட்டு அரச வாகனங்கள் அரசியல் ஊக்குவிப்பு அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கடந்த தேர்தல்களின் போது அறிக்கையிடப்பட்டுள்ளமையால், அவ்வாறான போலியான விடயங்களுக்காக அரச வாகனங்களை ஈடுபடுத்தாதிருத்தல் வேண்டும்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்புப் பிரிவிற்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு வாகனத்தை மோட்டார் வாதனத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட உரிய பதிவிலக்கமின்றி செலுத்த முடியாதாதலால் எந்தவோர் அமைச்சருக்கோ, பிரதி அமைச்சருக்கோ அல்லது அவர்களின் பணியாட் குழுவின் அங்கத்தினர்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ உரிய பதிவிலக்கமின்ற அரசாங்கத்தின் அல்லது அரச சார்பான நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால் அனைத்து வாகனங்களையும் திணைக்களங்கள், அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் என்பன திருத்தகங்களுக்குரிய இலக்கங்களில் (போலி இலக்கங்களில்) சேவையிலிடுபடுத்தப்படவில்லையென்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

04. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கத்திற்குரித்தான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பனவும் அரசாங்கத்தின் வளங்களாகும். ஆதலால் அக்கட்டிடங்களையும் அரசியல் கூட்டங்கள், கலந்தாய்வுகள் என்பவற்றிற்குப் பயன்படுத்தக் கூடாது. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்திற்குரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை பங்களாக்கள் என்பவற்றைக் கட்டணமின்றி வழங்குவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளதென்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். மேலும் உரிய மாகாணங்களில் அமையப் பெற்றுள்ள அரசிற்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை விடுதிகள் போன்றவற்றை எந்தவொரு அரசியல்வாதிக்கு, அலுவலருக்கு, வேறொரு நபருக்கு வாக்கெடுப்புக் காலக்கெடு முழுவதற்குமென குறித்தொதுதிக்கிக் கொடுப்பதை தவிர்ந்துகொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய விடுதிகளில் தங்குமிட வசதிகளைப் பெறுகின்ற நபர்களுக்கு அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபட இடமளிக்கக்கூடாது. அரசாங்கத்திற்குரித்தான கட்டிடங்கள் மற்றும் அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றை அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரியளவிலான புகைப்படங்கள் என்பவற்றை காட்சிக்காக வைப்பதற்குப் பயன்படுத்த இடமளிக்கக் கூடாது.

05. (i) தேர்தல்கள் காலக்கெடுவுக்குள் அரச நிதியைச் செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான நடமாடும் சேவைகள், கண்காட்சிகள், திறப்பு விழாக்கள் போன்ற வைபவங்கள் அரசியல்வாதிகளோடு தொடர்புடைய ஆட்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுவதோடு, அச்சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களும் அவர்களினால் வெளிப்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுகின்றது. அத்தகைய வெளிப்படுத்துகையொன்று தேர்தலுக்காகப் போட்டியிட முன்வந்துள்ள வேட்பாளர் ஒருவரின் வேட்பாண்மைக்கு முறையற்ற விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். இத்தகைய வைபவங்களை நிகழ்த்துவதன் மூலம் ஏதேனும் ஒரு கட்சியை/ சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதாகவோ அல்லது வேறொரு கட்சிக்கு/ குழுவுக்கு அல்லது வேட்பாளருக்குப் பாதிப்பொன்றை ஏற்படுத்துவதாகவோ முறைப்பாடுகள் கிடைக்க முடியுமாதலால், இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களை நிகழ்த்துவதை தவிர்ந்து கொள்ளல் பொருத்தமென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பொதுமக்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசிய நடமாடும் சேவைகளை இத்தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்துவதற்கு, தேர்தலோடு தொடர்புடைய வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் தீர்மானிக்கப்பட்டிருப்பின், அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பாக உடனடியாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். ஆயினும் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினாலோ அல்லது பதிவாளர் நாயகத் திணைக்களத்தினாலோ நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகளுக்கு இம்மட்டுப்பாடுகள் செல்லுபடியாகாது. இத்தகைய நடமாடும் சேவைகளை அலுவலர்களின் பங்களிப்போடு மாத்திரம் நடாத்த நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

(ii) இக்கால எல்லைக்குள் உரிய வாக்கெடுப்புப் பிரதேசத்திற்குள் உள்ள வதிவாளர்களுக்கு அரசாங்கக் காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரசாங்கக் காணி உறுதிகளின் அல்லது வீடுகளின் உரிமைக் கைமாற்றல் உறுதிகளின் பகிர்ந்தளிப்புக்கள், விவசாய உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுயதொழில்களுக்கான கருவிகள், மிதி வண்டிகள், சூரிய ஒளி மின் விளக்குகள், வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கான கருத்திட்டங்கள் மற்றும் வீட்டுக் கடன்களின் விநியோகம்/ நட்ட ஈட்டுத்தொகைகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் இடை நிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படுவதாக அரசாங்க அலுவலர்களினால் அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டு அவற்றிற்கான பட்டியல்களைத் தயாரித்தலும் இக்காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளக்கூடாது. ஏனெனில் அத்தகைய பணிகளூடாக வாக்காளர்களுக்கு உபசரணை வழங்கும் குற்றங்கள் நிகழ்த்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலும் இத்தகைய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினூடாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவித்தல் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலுமேயாகும். மேலும் வீட்டுக் கடன் உதவிகளை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல் கட்டிடப் பொருட்களை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படல் வேண்டும். எனினும் ஒத்திவைக்கப்பட முடியாத அவசர கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றிற்கு ஏற்கனவே நாள் குறிக்கப்பட்டிருப்பின் அல்லது அவசர விசேட தேவைப்பாடொன்று ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பான பொருத்தமான

அறிவுறுத்தல்கள் வெளியிடப்படும். அத்தகைய கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன கூட எந்தவோர் அரசியல் கட்சியினதும்/ சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர் ஒருவருக்கு விசேட அனுகூலத்தையோ (அல்லது பிரதிகூலத்தையோ) ஏற்படுத்தாத விதத்தில் அமுல் செய்யப்பட வேண்டுமெனவும் அதற்காக அலுவலர்கள் மாத்திரம் கலந்துக்கொள்ளச் செய்யப்பட வேண்டுமெனவும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

06. (i) மேலும் இத்தேர்தலோடு தொடர்புடைய அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் அலுவலர்கள் எவருக்கும் அலுவலக நேரத்தினுள் அல்லது அலுவலக தினங்களில் கடமை லீவு பெற்றுக் கொண்டு ஏதேனும் ஒரு கட்சியை/ குழுவை அல்லது வேட்பாளர் ஒருவரை ஊக்குவிப்பதற்காகவோ அல்லது ஏதேனும் ஒரு கட்சி/ ஒரு குழு அல்லது வேட்பாளர் ஒருவருக்கு எதிராக செயற்படுவதற்காக அவகாசம் வழங்கப்படக் கூடாதென்பதோடு, அவ்வாறு செயற்படுகின்ற அலுவலர்கள்/ ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று ரீதியாக நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும்.

(ii) அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசியல் உரிமைகள் அற்ற பதவிநிலை அலுவலர்கள், கூட்டுத்தாபனங்கள்/ நியதிச் சட்ட சபைகளின் பதவிநிலை அலுவலர்கள், கிராம அலுவலர்கள் போன்ற சமாதான அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளின் அங்கத்தினர்கள் எவருக்கும் தனது அலுவலக நேரத்திற்குப் புறம்பாகவோ அல்லது விடுமுறை தினங்களிலோ கூட நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவோர் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிக்கப்படும் விதத்தில் அல்லது பாதிப்புக்குட்படும் விதத்திலான செயற்பாடுகளில் கலந்து கொள்வதிலிருந்தும், அவற்றுக்கு ஆதரவு வழங்குவதிலிருந்தும் தவிர்ந்திருத்தல் வேண்டும். அரசியல் உரிமைகளற்ற அனைத்து அலுவலர்களுக்கும் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி கிடையாதென்ற விதியை மிகக் கடுமையாக அமுல்படுத்துதல் வேண்டும்.

(iii) மேலும் கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகள் என்பவற்றின் தவிசாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோரும் இத்தேர்தல் காலப்பகுதியினுள் எந்தவோர் அரசியல் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு ஊக்குவிப்பான அல்லது பாதிப்பான விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து தவிர்ந்திருப்பார்களென தயவன்புடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

07. (i) பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினதும் நீதிச் சேவை ஆணைக்குழுவினதும் நிருவாகத் தத்துவத்தின் கீழ் வருகின்ற விடயங்களுக்கு பதினேழாம் திருத்தத்தின் மட்டுப்பாடுகள் பாதிப்பை ஏற்படுத்தமாட்டா. ஆதலால் அவ்வாணைக்குழுக்களின் தத்துவத்தின் கீழ் முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தவிர்ந்த, அரச நிறுவனங்களில் எந்த விதமான ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், பதவியுயர்வுகள் என்பவற்றை செய்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(ii) தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபைப் பிரதேசங்களில் வாக்கெடுப்புக் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் சாதாரண இடமாற்றங்களை 2017 திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2018 பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதி வரை இடைநிறுத்தி வைக்க வேண்டுமென்பதோடு, தேர்தல் கடமைக்காக ஈடுபடுத்தப்படாத அரசாங்கத்தின் அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களை வாக்கெடுப்புக் கால எல்லைக்குள் இடமாற்றம் செய்கின்றபோது அரசியல் காரணங்களின் அடிப்படையில் இத்தகைய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டனவென்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாதவாறு உரிய இடமாற்றங்களை மேற்கொள்ள அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii) தேர்தல் காலப்பகுதியின் போது தேர்தல் நடாத்தப்படுகின்ற அதிகார பிரதேசங்களினுள் பணியாற்றுகின்ற அலுவலர்களை அத்தியாவசிய விடயமொன்றின் காரணமாக உதாரணமாக புலமைப் பரிசில், உயர் கல்வி, வைத்திய சிகிச்சை சமய கடமைகளை நிறைவேற்றுவதற்கான பயணங்கள் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு பிரயாணங்களை மட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படவில்லை. ஆதலால், அவ்வாறான தேவைப்பாடுகளுக்காக அலுவலர்கள் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதாயின், அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து முன்னனுமதியைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாடொன்றில்லை. இருப்பினும், தேர்தல் நடாத்தப்படுகின்ற மாவட்டங்களின் அலுவலர்கள் குழுவாக இக்காலப்பகுதியினுள் வெளிநாட்டு பிரயாணங்களை மேற்கொள்வதாயின், முன்னனுமதியைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். மேலும் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் அதிகார சபைகளின் ஒதுக்கீடுகளை செலவிட்டு அலுவலர்கள் வெளிநாடுகளுக்கு செல்வதாயின், அந்த வெளிநாட்டு பயணங்களை தேர்தல் காலப்பகுதியின் பின்னர் மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். இருப்பினும், மிகவும் அவசரமான மற்றும் காலம் தாழ்த்த முடியாத காரணங்களினால் வெளிநாட்டு பிரயாணங்களை மேற்கொள்வதற்கு அவசியம் ஏற்படுமாயின், அதற்கான அனுமதியளித்தல் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்படுகின்றமையினால் அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பிலான கோரிக்கைகளை முன்கூட்டியே சமர்ப்பிப்பது சிறந்ததாகும்.

(iv) இந்த உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வுகள் என்பவற்றுக்கான நாடளாவிய நிகழ்ச்சித் திட்டமொன்றை காலம் தாழ்த்தாது நடைமுறைப்படுத்த வேண்டுமென அமைச்சு செயலாளர் எதிர்பார்க்கின்ற போது மற்றும் முழு தீவுக்கும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவாறு அரச சேவைக்கு அல்லது அரச

நிறுவனங்களுக்கு ஏற்புடைய முறையான, அரசியல் தலையீடுகளின்றி மேற்கொள்ளப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக்கள்/ பதவியுயர்வுகள் என்பவற்றுக்கு இச்சுற்றறிக்கை ஏற்புடையதாகாது.

(v) மேலும் அரச மற்றும் உள்ளூர் அதிகார சபைகளின் வருடாந்த இடமாற்றங்கள் 2018 பெப்புருவரி 15 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் பிற்போடப்படல் வேண்டும்.

(vi) ஏதேனும் விசேட அத்தியாவசிய விடயமொன்றின் காரணமாக (அதாவது ஒழுக்காற்று நடவடிக்கை, அலுவலரின் கோரிக்கை என்பவற்றின் அடிப்படையில் அனுதாப ரீதியாக செயற்படுவதற்கு நேரிடல், ஏதேனும் பாடசாலையொன்றுக்கு தேவையான ஆசியர்களை வழங்குதல் போன்ற விடயங்கள் காரணமாக) தேர்தல் நடாத்தப்படவுள்ள பிரதேசங்களின் அலுவலர்கள்/ ஆசிரியர்கள்/ அதிபர்கள் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட வேண்டி வருகின்ற போது அவ்விடமாற்றங்கள் அரசியல் ரீதியான நிகழ்வுகள் காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற இடமாற்றங்களல்லவென நிரூபிக்க முடியுமானவிடத்து, இன்றேல் அது தொடர்பான முறைப்பாடுகள்/ குற்றச்சாட்டுக்கள் எவையும் கிடைக்கப்பெறாவிடின் அத்தகைய இடமாற்றல்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தை அறிவூட்டினால் அதற்கான அனுமதியை வழங்க முடியும்.

**08. அரச ஆதனங்கள் குறிப்பாக அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள்/ குழுக்கள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக ஈடுபடுத்தும் போக்கொன்று காணப்படுவதாக கடந்த தேர்தல்களின் போது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் அவ்வாறான முறையற்ற அலுவல்களுக்கு எவ்விதத்திலும் இடமளித்தல் கூடாது. கடந்த தேர்தல்களின் போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களில் அசவர கடமை அலுவல்கள் அல்லது விஷேட அபிவிருத்தி கருத்திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களைச் சமர்ப்பித்து கட்சிகள்/ வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக (இன்றேல் பாதிப்புக்குட்படுத்துவதற்காக) தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களுக்கப்பால் அரச/ அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் அரச/ அரச நிறுவனங்கள் வசமுள்ள அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட வாகனங்களைத் தேரதல் நடாத்தப்படுகின்ற பிரதேச அலுவலகங்களுக்கு இணைப்பு செய்தல் போன்ற முறையற்ற செயல்களை மேற்கொள்வதற்கு எந்தவோர் அலுவலருக்கும் இடமளித்தல் கூடாதென தயவன்புடன் அறியத் தருகின்றேன். அதேபோன்று தேர்தல் காலப்பகுதியினுள் விஷேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதையும் பிற்போடுதல் வேண்டும்.**

09 இத்தேர்தலின் போது உள்ளூர் அதிகார சபைகளின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்குவிக்கின்ற அல்லது தடுக்கின்ற பணிகள் சார்பாக அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் விதத்திலான இத்தடை எவ்வித தடங்கலுக்கும் உட்படாதவாறு கடுமையாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மேலும் ஒவ்வோர் அமைச்சின் கீழுள்ள அனைத்துத் திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு அமைச்சு செயலாளர்களிடம் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அதேபோன்று அவ்வனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல் மற்றும் கட்டளைகளுக்கமைய நடந்து கொள்கின்றார்களாவென்பதை அமைச்சுக்களின் செயலாளர்களும் திணைக்களத் தலைவர்களும் சந்தேகத்திற்கிடமின்றி தெரிந்து கொள்ளலும் இன்றியமையாததாகும்.

10. தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கு, பாதுகாப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவது உரிய சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரசாங்க அதிகாரிகளினதும் பணியாக இருத்தல் வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ(2) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக உங்களது மேலான கவனம் ஈர்க்கப்படல் இன்றியமையாததென்பதையும் தயவன்புடன் அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

11. இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் பணியாட் குழுவினர்கள் ஆகியோரை அறிவூட்டும் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்குக் கையளிக்கப்படுகின்றதெனவும் மாகாண சபைகளின் பிரதம அமைச்சர்கள் மற்றும் ஏனைய அமைச்சர்களை அறிவுறுத்தல் பிரதான செயலாளர் மற்றும் குறித்த மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்பு என்பதையும் தயவு செய்து கருத்தில் கொள்வது பொருத்தமாகும்.

12. அதேபோன்று பொருத்தமானவிடத்து, ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அவ்வாணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் அங்கத்தினர்களை இச்சுற்றறிக்கை தொடர்பாக அறிவுறுத்தவும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

13. அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக உங்களது அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு இன்றேல் கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுப்பதும் உரிய அலுவலர்களின் பொறுப்பொன்றென்பதைக் குறித்துக்காட்ட விரும்புகின்றேன்.

14. இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக வழக்கமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், தேர்தல்கள் கண்காணிப்புக் குழுக்கள் என்பன அறிவூட்டப்படவுள்ளதோடு, “தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் முகவர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்கள் என்போரை உள்ளடக்கிய தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய செயற்பாட்டு நிலையத்தினால்”இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களோடு தொடர்புடைய முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்யப்படுமெனவும் பாதிக்கப்பட்ட தரப்பினரால், தேர்தல் மனுக்களிலும் , வேறு நீதிமன்றச் செயன்முறைகளிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்காத விதத்திலான செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்க அவகாசமுள்ளதெனவும் மேலும் தயவன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

15. இக்கடிதத்தோடு இணைக்கப்பட்டுள்ள (LAE/2018/4B/F1) ஆம் இலக்க படிவத்தை பூரணப்படுத்தி அனுப்புவதன் மூலம் இக்கடிதம் கிடைக்கப்பெற்றமை பற்றியும் மற்றும் அதற்கமைய அலுவல்களை மேற்கொள்வதற்கு குறித்து கொள்ளப்பட்டமை பற்றியும் உறுதிப்படுத்துமாறு தயவன்புடன் அறியத் தருகின்றேன். மேலும் உங்கள் நிறுவனம் வசமுள்ள வாகனங்கள் தொடர்பாக அலுவல்களை மேற்கொள்கின்ற அலுவலர்கள் தொடர்பான விபரங்களையும் அதன் கீழுள்ள பகுதியில் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு தயவன்புடன் அறியத் தருகின்றேன்.

16. இந்த அறிவுறுத்தல்கள்/ கட்டளைகள் தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டோடு வெளியிடப்படுகின்றது.

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு,

**பிரதிகள் :-**

1. சனாதிபதியின் செயலாளர் - தயவன்புடன் தகவலுக்காக.
2. பிரதமரின் செயலாளர்/ அமைச்சரவை செயலாளர் - தயவன்புடன் தகவலுக்காக.
3. கணக்காய்வாளர் நாயகம் கணக்காய்வாளர் திணைக்களம் - தயவன்புடன் தகவலுக்காக.
4. பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல்கள் குற்றச்சார்த்துதல்கள் புலன் விசாரணைக் ஆணைக்குழு - தயவன்புடன் தகவலுக்காக.
5. அனைத்து அமைச்சுக்களினதும் மேலதிக செயலாளர்கள் மற்றும் செயற்படுவதற்காகவும். - தயவன்புடன் தகவலுக்காகவும்
6. முப்படை தளபதிகள்/ சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம். - உரிய அலுவல்களுக்காகவும்
7. பொலிஸ் மா அதிபர்
   - தயவன்புடன் தகவலுக்காகவும் மற்றும் தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்யும் அலுவலர்களை அறிவுறுத்தவதற்காகவும்.
8. தேர்தல்கள் நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபைகளின் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும்
   - இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் விதிமுறைகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பற்றி உடனடியாக எனக்கு அறிக்கையிடுவதற்கும் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக.
9. வாக்கெடுப்பு நடாத்தப்படவுள்ள உள்ளூர் அதிகார சபைகளின் அனைத்து மாவட்ட மேலதிக/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு
   - தயவன்புடன் தகவலுக்காகவும் மற்றும் உங்களது மாவட்டத்தின் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள், அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாநகர ஆணையாளர்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஆகியோருக்கு இக்கடிதத்தின் பிரதியொன்றை அனுப்பி வைப்பதற்கும் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பதற்கும்.

**LAE/2018/4B/F1**

சுற்றறிக்கை கிடைத்தமை பற்றி அறிவித்தல் படிவம்.

(அலுவலகக் கடிதத் தலைப்பொன்றில் தயாரித்து அனுப்புவதற்கு தயவு செய்து நடவடிக்கையெடுக்கவும். அமைச்சுக்களில் இச்சான்றிதழை செயலாளரோ அல்லது மேலதிக செயலாளரொருவரோ இன்றேல் சிரேட்ட உதவிச் செயலாளர் ஒருவரோ, திணைக்களமொன்றாயின் திணைக்களத் தலைவரோ அல்லது மேலதிக அல்லது பிரதித் தலைவரொருவரோ கூட்டுத்தாபனமொன்று அல்லது நியதிச் சட்ட சபையொன்று தொடர்பாயின் பொது முகாமையாளரோ/ மேலதிக பொது முகாமையாளரோ அல்லது பிரதிப் பொது முகாமையாளரொருவரோ அல்லது அதற்குச் சமமான பதவியொன்றை வகிப்பவரோ கையொப்பமிட்டு அனுப்புதல் வேண்டும்.)

*இப்படிவத்தை தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.elections.gov.lk)*

எனது இல :

உமது இல : **LAE/2018/4B**

அலுவலக முகவரி

……………………………………………………………………

……………………………………………………………………

திகதி- ……………………………………………………………

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2018**
**அரச ஆதனங்களின் துஷ்பிரயோகம்**

மேற்குறித்த விடயம் தொடர்பாக உங்களால் அனுப்பி வைக்கப்பட்ட **2017.11.28** ஆந் திகதி மற்றும் **LAE/ 2018/ 4B** ஆம் இலக்க கடிதம் கிடைக்கப் பெற்றதெனவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்தல் அரச ஆதனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதவதை தடுப்பதற்கு உரியவாறு நடவடிக்கையெடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளதாகவும், அதிலுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட எனக்குக் கீழுள்ள அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து பதவிநிலை அலுவலர்களுக்கும் அறிவிக்கப்படுமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

02. இவ்வமைச்சு/ திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ அதிகார சபைகள் வசமுள்ள வாகனங்களைப் பயன்படுத்துதல்/ விடுவித்தல் தொடர்பாக அலுவல்களை மேற்கொள்கின்ற அலுவலரின்/ அலுவலர்களின் விபரங்களை கீழே குறிப்பிடுகின்றேன்.

பெயர் : ……………………………………………………………………………………

பதவி : ……………………………………………………………………………………

அலுவலக முகவரி : ………………………………………………………………………

தொலைபேசி இலக்கம் : (i) அலுவலகம் : ……………………………………
(ii) வீடு : ……………………………………
(iii) கையடக்க : ……………………………………

……………………………………………………
கையொப்பம்

……………………………………………………
பெயர் மற்றும் பதவி

මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426
*web : www.slelections.gov.lk*

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)
*e-mail : info@slelections.gov.lk*


| මගේ අංකය : | ඔබේ අංකය : | දිනය : |
|---|---|---|
| எனது இல. EC/ADM/LAE/01/ST | உமது இல. | திகதி 28.11.2017 |

**அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,**
மாகாண பிரதம செயலாளர்கள்,
செயலாளர், அரச சேவை ஆணைக்குழு,
**அனைத்து திணைக்களத் தலைவர்கள்,**
மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்.

**அரச சேவையின் முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் நாடளாவிய சேவைகள் என்பவற்றின் வருடாந்த இடமாற்றம் - 2018**

தற்போது உள்ளூர் அதிகார சபைகள் பலவற்றின் தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன. பெரும்பாலும் தேர்தல் 2018 சனவரி மாதத்தில் ஒரு தினத்தில் நடாத்தப்படும்.

02. ஏற்கனவே தேர்தல் கடமைகளுக்காகப் பணியாட் குழுவினரை நியமனம் செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. தற்போது தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அலுவலர்களை இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2018 சனவரி மாதத்தினுள் இடமாற்றம் செய்யப்பட்டால் தேர்தல் கடமைகளுக்கு போன்றே இடமாற்றம் செய்யப்படுகின்ற அலுவலர்களும் சிரமங்களுக்கு உட்படுவார்கள்.

03. ஆதலால், வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதை 2018 பெப்புருவரி 15 ஆம் திகதி வரை அல்லது அதற்கு பின்னர் வரை பிற்போடுமாறு தயவன்புடன் அறியத் தருகின்றேன். அதற்கு முன்னர் இடமாற்றம் தொடர்பான உத்தரவைப் பிறப்பிப்பது தொடர்பில் ஆட்சேபனையொன்று இல்லையென்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

04. இது வரை நடாத்தப்பட்ட அனைத்து தேர்தல்களின் போதும் நீங்கள் வழங்கிய ஒத்துழைப்பை பெரிதும் மெச்சுகின்றேன்.

**மஹிந்த தேசப்பிரிய,**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல் ஆணைக்குழு சார்பாக

**பிரதிகள் :-**

1. சனாதிபதியின் செயலாளர் - தயவன்புடன் தகவலுக்காக
2. பிரதமரின் செயலாளர் - தயவன்புடன் தகவலுக்காக
3. அமைச்சரவையின் செயலாளர் - தயவன்புடன் தகவலுக்காக


සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி : 011-2868444
ෆැක්ස්/ தொலைநகல் : 011-2868445
*e-mail : comelesl@sltnet.lk*

ලේකම්
செயலாளர்
දුරකථන/தொலைபேசி : 011-2879133
ෆැක්ස්/தொலைநகல் : 011-2879133
*e-mail : admin@slelections.gov.lk*

නියෝජ්‍ය මැතිවරණ කොමසාරිස් (පාලන)
பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்)
දුරකථන/தொலைபேசி : 011-2868406
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868406
*e-mail : admin@slelections.gov.lk*